**TNEB**
**எம்ப்ளாயீஸ்**
**பெடரேஷன் நியூஸ்**

மலர்- 5 ✧ இதழ்-2 ✧ ஜனவரி 2023

நிர்வாக ஆசிரியர்

**அ. சேக்கிழார்**

ஆசிரியர் குழு

**சு. மணிகண்டன்**
**J.L. பாஸ்டின் ராஜ்**
**S. இராமநாதன்**
**K. செல்வராஜு**
**R. ஜெயராமன்**
**வீ. பாரதி**

செயலாளர் (வெளியீடு)

**A. செந்தில்குமார்**

39/101, சிங்கண்ணா தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002.
✆ : 9841446621
tnebemployeesfederation3600@gmail.com

# பொங்கலோ பொங்கல்!!

**போ**க்குவரத்தோடு ஒப்பீடா? இது என்ன புது விந்தை! சாலையில் பயணிப்பவர்களும், சாவோடு போராடி தினசரி வேலை பார்ப்பவர்களும் ஒன்றா? சாமான்ய மனிதர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்திருந்தால் ஊடகத்துறைக்கு இட்ட கையொப்பம் போல இன்னொன்றுக்கு இட்டிருந்தால் மின்துறையில் இறந்த முப்பதுக்கு பேருக்கு மேலான குடும்பம் இழந்த உயிருக்கு இழப்பீடாகிலும் கிடைத்திருக்கும்!

உயர்நீதிமன்றத்தில் ஒப்பந்த தொழிலாளருக்கு எதிராக வழக்குக்கு செலவு செய்வது போலவே உழைக்கின்றவர் களின் போராட்ட உரிமையை பறிக்கும் செயலுக்கும் பணம் தண்ணீராய் சிலவாகியிருப்பது ஜனநாயகத்தின் குரல்வளையை நெறிப்பதறகு சமம்தானே!

அரசாங்கத்தைவிட அதிகம் பெறுகிறார்கள் என்ற ஆத்திரம் தலைக்கேறுகிறது சில அயலகப் பணிக்கு வந்த அதிகாரிகளுக்கு!! ஏன்! அரசாங்கத்தில் வேலை பார்ப்பவர்களுக்கு கரண்ட் என்றால் என்னன்னு தெரியுமா? கரண்ட்டில் அடிபட்டா எப்படி ஷாக்கடிச்சு கருகி போவாங்கண்ணு தெரியுமா? எத்தனை அரசு பணியாளர் பணி செய்யும்போது ஆபத்தில் இறந்துள்ளார்கள் கணக்கு உண்டா? புள்ளி விபரம் தரமுடியுமா? அரசாங்கத்திலிருந்து இங்கே வேலை செய்ய வந்தால் ஆதியையும், அந்தத்தையும் அசைத்து பார்க்க வேண்டுமா?

அரசுத் தரப்பிலிருந்து ஊதியக்குழுவில் உறுப்பினர் சேர்க்கைக்கு என்ன அவசியமும், அத்தியாவசியமும் ஏற்பட்டது, யாருடைய ஆசையை பூர்த்தி செய்ய இந்த வேலை நடந்துள்ளது.

22.02.2018ல் கையெழுத்தான முத்தரப்பு ஒப்பந்தம் நடப்பில் இருக்கும்போதே ஆட்குறைப்புக்கும், அவுட்சோர்சிங்கிற்கும் அவசர கோலத்தில் ஆலோசனை கேட்பதா? பேச்சுவார்த்தை மேசையின் நாகரீகம் தெரியாத நபர்களால் பாரம்பரியம் கெட்டுப் போவதா? கணக்கியல் உறுப்பினர் (Accounts Member) என்பது உறுப்பினர் கணக்கு (Members Accounts) என மாற காரணமாக இருந்த திரு. கதிரேசன் அவர்கள் ஓய்வுக்குப் பின்னர் வாரிய உறுப்பினர்களெல்லாம் இயக்குநரான பின்னர் நிதிக்கு இயக்குநராக நியமனம் நடைபெற்றுவதை இனி நிறுத்தச் சொல்லுவதுதான் சரியாக இருக்கும் என்ற நிலை ஏற்பட்டுள்ளதே?! IA&AS படித்தவர்கள் பணி செய்த இடத்தில் பணி செய்தால் ஆளும் கட்சிக்கு வக்காலத்து வாங்குவதுதான் நிர்வாகத்தின் நேர்மைத் திறனா? அநாகரிகமான செயலுக்கு துணை போவது அவலத்தின் உச்சமாகிவிடாதா?

66 ஆண்டு வயதுடைய மின்சார வாரியத்தில் 1969லிருந்து 2018 வரை ஏற்படுத்தப்பட்டுள்ள முத்தரப்பு ஒப்பந்தங்களுக்கு பின்னால் இன்று தலைகீழாக நடப்பதுபோல் வரலாற்றுப் பிழையாக வந்திருக்கிறது. 10.01.2023ல் வாரியம் வழங்கியுள்ள ஊதிய உயர்வுக்கான முன் வரைவு.

1. BP. No. 1010 dt. 28.5.1970 - 1.12.1969 முதல் ஊதிய உயர்வு
2. BP. No. 425 dt. 07.4.1977 - 1.12.1974 முதல் ஊதிய உயர்வு
3. BP. No. 252 dt. 14.11.1979 - 1.12.1979 முதல் ஊதிய உயர்வு
4. BP. No. 86 dt. 24.10.1985 - 1.12.1984 முதல் ஊதிய உயர்வு

5. BP. No. 57 dt. 05.8.1989 - 1.12.1988 முதல் ஊதிய உயர்வு
6. BP. No. 5 dt. 25.1.1994 - 1.12.1992 முதல் ஊதிய உயர்வு
7. BP. No. 58 dt. 18.7.1998 - 1.12.1996 முதல் ஊதிய உயர்வு
8. BP. No. 220 dt. 16.10.2005 - 1.12.2000 முதல் ஊதிய உயர்வு
9. BP. No. 223 dt. 21.11.2009 - 1.12.2007 முதல் ஊதிய உயர்வு
10. BP. No. 3 - 1.12.2011 dt. 11.1.2014 முதல் ஊதிய உயர்வு
11. BP. No. 8 dt. 02.3.2018 - 1.12.2015 முதல் ஊதிய உயர்வு
12. Yet to be Settled - 1.12.2019 முதல் ஊதிய உயர்வு

செயலகப்பிரிவு என்று ஒன்று இருக்கிறது. ஊதிய உயர்வுக்கென ஒரு பிரிவு இருக்கிறது. துணைச் செயலாளர் ஒருவர் தலைமையில் சார்பு செயலாளர், பிரிவு அலுவலர், உதவி பிரிவு அலுவலர் அடங்கிய குழு இருந்தும் இதுவரை நடைமுறையில் உள்ள முன்வரைவு தயாரிப்பு தொடர்பான அனுபவம் அற்றுப் போய்விட்டதா எண்ணும் அளவிற்கு யாரோ ஆசைப்படுவதை முன்வரைவு தாங்கி வந்திருக்கிறது.

நட்டத்திற்கு யார் காரணம் ஊதியம் தருவதும் ஓய்வூதியம் தருவதுமா காரணம்? மொத்த வருவாயில் 10%க்கு மேல் செலவு செய்த வரலாறு உண்டா? வயிற்றுப்பசிக்கு அழுகிற குழந்தைக்கு பால் கொடுக்கலாம்? வயிற்றுவலிக்கு பாலா மருந்து? அரசிடமிருந்து BP2க்கு அதிகாரப் பூர்வ விலக்கு பெறாமல் அகவிலைப்படி வழங்கிவிட்டால் அடுத்த அகவிலைப்படி யார் தருவார்? கேள்வி கேட்டால் பதில் சொல்லாமல் விசனப்படுவதா? கோப்பு மேஜைக்கு வராமல் காத்திருந்த காலம் மீண்டும் வராது என்பது என்ன நிச்சயம்!

அணி திரட்டப்பட்ட தொழிலாளர் சக்தி ஒருங்கிணைந்து ஒன்றிணைந்து நிற்கிறது. கைவிளக்கை அமர்த்துதல்போல் அமேசான் காட்டுத்தீயை அணைத்துவிட முடியாது என்பது அறிவுசால் பெரியோர்கள் அறிந்திருக்கவில்லை போலும்!

நெருப்பு புகையவில்லை! புகைந்து கனன்று கொண்டிருக்கிறது! கனல் கொழுந்துவிட்டு எழும்! தொழிலின் மேம்பாட்டில் தொழிலாளர் நலன் பேணுதல் என்ற இரு தூண் கொள்கையில் ஊறித் திளைத்தவர்கள், தொழில் அமைதியை விரும்புவதைப் போலவே சுமூகமான உறவையும் விரும்புவோம் என்பதை அறியாது நின்றால், எதிர்நீச்சல் போடுவதில் சளைத்தவர்களும் அல்ல! தோல்வியும் கண்டவர்களல்ல! தொழிலாளர் சமுதாயம் என்பதை நிரூபிக்கும் வாய்ப்பினை அமைத்து தந்திடுவீர்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை!

அநீதிக்கு எதிராக ஆர்ப்பரிப்பதும், குரல் எழுப்புவதும், போராடுவதும், வெற்றி பெறுவதும் தொழிலாளர் வர்க்கத்திற்கு என்றும் இனிப்பான பொங்கல்தான்! சந்திப்போம்!! சிந்திப்பீர்!!!

பொங்கல் நல்வாழ்த்துகள்!

*- ஆசிரியர்*

## சந்தாதாரர்கள் - உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் கவனத்திற்கு

நமது சங்க இதழான **''எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்''**-ல் தங்களது கருத்துகள், கட்டுரைகள், தங்கள் வட்டத்திற்குட்பட்ட தொழிலாளர்கள் மற்றும் சங்கத்திற்கான செய்திகளை கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்திடுவீர்!

**நிர்வாக ஆசிரியர்,**
**TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்**
39/101, சிங்கண்ணா தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002.
**✆ : 9841446621 ✆: 8939152361**
**tnebemployeesfederation3600@gmail.com**

***குறிப்பு :*** *செய்திகள் வெளியிடுவது ஆசிரியக் குழுவின் முடிவிற்குட்பட்டது.*

# தொழிலாளர் துறை

அனுப்புநர் :

**தொழிலாளர் துணை ஆணையர்** (தலைமையிடம்),
தொழிலாளர் ஆணையர் அலுவலகம்,
5வது தளம், தேனாம்பேட்டை,
சென்னை-600 006.

பெறுநர் :

1. **செயலாளர்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை-600 002.
2. **பொதுச்செயலாளர்**
தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு,
27, மசூதி தெரு, சேப்பாக்கம்,
சென்னை-600 005.
3. **பொதுச்செயலாளர்,**
தமிழ்நாடு மின்வாரிய கார்டு பில்லிங் ஸ்டாப் யூனியன்,
எண். 4, மின்வாரிய வளாகம்,
144, அண்ணாசாலை, சென்னை-600 002.
4. **பொதுச்செயலாளர்,**
தமிழ்நாடு எலெக்ட்ரிசிட்டி போர்டு அக்கவுன்ட்ஸ் அண்டு எக்ஸிகியூட்டிவ் ஸ்டாப் யூனியன்,
அறை எண். 7, எம்.எல்.டி.சி. பி பில்டிங்,
மின்வாரிய வளாகம், 144, அண்ணாசாலை, சென்னை-600 002.
5. **தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன்,**
எண். 39/101, சிங்கண்ண தெரு, சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை-600 002.
6. **தமிழ்நாடு நேஷனல் எலக்ட்ரிசிட்டி ஒர்க்கர்ஸ் பெடரேஷன்,**
52, Dr. Subbarayan Road, Salem - 636 001.
7. **தமிழ்நாடு மின்வாரிய ஜனதா தொழிலாளர் சங்கம்**
நெ. 5, MLDC, பில்டிங் 144,
அண்ணாசாலை, சென்னை-600 002
8. **தமிழ்நாடு மின்சாரத் தொழிலாளர் சம்மேளனம்,**
VGR இல்லம், 92, குருவப்ப தெரு,
சென்னை-600 002.
9. **மின்சார பிரிவு அண்ணா தொழிற்சங்கம்,**
144, அண்ணாசாலை, சென்னை-600 002.

10. **தமிழ்நாடு தேசிய மின்சாரத் தொழிலாளர் சம்மேளனம் (INTUC)**
18, எல்லையம்மன் கோயில் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை-600 033.

11. **தமிழ்நாடு மின்சார வாரிய தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம்,**
அறை எண். 6, மின்வாரிய தலைமை அலுவலக வளாகம்,
144, அண்ணாசாலை, சென்னை-600 002.

12. **தமிழ்நாடு பவர் இன்ஜினியர்ஸ் ஆர்கனைசேஷன்,**
எண். 27, மசூதி தெரு, சேப்பாக்கம்,
சென்னை-600 005.

**கடித எண். ப2/39840/2022, நாள்: 27.12.2022**

அய்யா,

**பொருள் : வேலை நிறுத்தம் - நிர்வாகம் - தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம் - எதிர் - மேற்குறிப்பிட்ட 11 தொழிற்சங்கங்கள் பல்வேறு தேதிகளில் தாக்கல் செய்த வேலை நிறுத்த அறிவிப்பு - மின்வாரிய ஊழியர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் அனைவருக்கும் 01.12.2019 முதல் ஊதிய உயர்வு நிலுவைத் தொகையுடன் வழங்க வேண்டும் உள்ளிட்ட சில கோரிக்கைகளை வலியுறுத்தி 10.01.2023 காலை 6 மணி முதல் 11.01.2023 காலை 6 மணி வரை வேலைநிறுத்தம் செய்வதாக அறிவிப்பு பெறப்பட்டது - தொடர்பாக.**

**பார்வை : தமிழ்நாடு மின்வாரிய தொழிற்சங்கங்கள் (11 தொழிற்சங்கங்கள்) 14.12.2022, 19.12.2022, 20.12.2022, 21.12.2022 மற்றும் 22.12.2022 ஆகிய தேதிகளில் வழங்கியுள்ள வேலை நிறுத்த அறிவிப்பு கடிதங்கள்.**

பார்வையில் காணும் தொழிற்சங்கங்கள், மின்வாரிய ஊழியர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் அனைவருக்கும் 01.12.2019 முதல் ஊதிய உயர்வு நிலுவைத் தொகையுடன் வழங்க வேண்டும் உள்ளிட்ட சில கோரிக்கைகளை வலியுறுத்தி 10.01.2023 காலை 6 மணி முதல் 11.01.2023 காலை 6 மணி வரை வேலை நிறுத்தம் செய்வதாக அறிவிப்பு வழங்கியுள்ளது. இதுகுறித்து தொழிலாளர் துணை ஆணையர் (தலைமையிடம்) முன்னிலையில் 03.01.2023 அன்று முற்பகல் 11 மணிக்கு நடைபெற உள்ள பேச்சுவார்த்தைக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் இருதரப்பினரும் தவறாது ஆஜராகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், வேலை நிறுத்தம் போன்ற நேரடி நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் என்றும், பொது அமைதி காத்திடுமாறும், சமரச பேச்சுவார்த்தையில் சுமூக முடிவை எதிர்நோக்குமாறும் தொழிற்சங்கத்திற்கு அறிவுறுத்தப்படுகிறது.

தொழிலாளர்களின் பணி நிலைமைகளில் எவ்வித மாற்றமும் செய்யாமல் "Status-Quo" நிலையை கடைபிடிக்குமாறு நிர்வாகத்திற்கு அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு : மேற்படி

தொழிலாளர் துணை ஆணையர்
(தலைமையிடம்)

# வேலை நிறுத்த அறிவிப்பிற்கு கோரிக்கைகள் மீதான செயலகக் கிளையின் பதில்

**செயலகக்கிளை**

தொழிற்சங்கம் 1. தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு
2. தமிழ்நாடு மின்வாரிய கார்டு பில்லிங் ஸ்டாப் யூனியன்
3. தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்
4. தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன்
5. தமிழ்நாடு நேஷனல் எலக்ட்ரிசிட்டி ஒர்க்கஸ் பெடரேஷன் (சேவியர் குரூப்)
6. தமிழ்நாடு மின்வாரிய ஜனதா தொழிலாளர் சங்கம்
7. தமிழ்நாடு மின்சாரத் தொழிலாளர் சம்மேளனம்
8. மின்சார பிரிவு அண்ணா தொழிற்சங்கம்
9. தமிழ்நாடு நேஷனல் எலக்ட்ரிசிட்டி ஒர்க்கர்ஸ் பெடரேஷன் (சுவர்ணராசு குருப்)
10. தமிழ்நாடு மின்சார வாரிய தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம்
11. தமிழ்நாடு பவர் இன்ஜினியர்ஸ் ஆர்கனைசேஷன்

இடம் : தொழிலாளர் ஆணையர் அலுவலகம்

பொருள் : தொழிற்சங்கங்களின் கோரிக்கைகள் குறித்து இவ்வலுவலகத்தில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை குறித்த தகவல்.

நாள் : 03.01.2023

| கோ. எண். | கோரிக்கைகள் | எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் |
|---|---|---|
| 1. | மின்வாரிய ஊழியர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் அனைவருக்கும் 01.12.2019 முதல் ஊதிய உயர்வு நிலுவைத் தொகையுடன் வழங்கிட வேண்டும். | இக்கோரிக்கை தொடர்பாக குழு அமைக்கப் பட்டுள்ளது. மேலும் 01.12.2019 ஊதிய உயர்வு முதற்கட்ட பேச்சுவார்த்தை (ஊதிய குழு மற்றும் தொழிற்சங்கங்களுக்கிடையே) 15.09.2022, 16.09.2022 மற்றும் 21.09.2022 ஆகிய தேதிகளில் நடத்தப் பட்டு அதற்கான கோப்பு பரிசீலனையில் உள்ளது. மேலும் அரசின் உத்தரவின்படி, அரசு அதிகாரி ஒருவரை ஊதிய மாற்றம் குழுவிற்கு உறுப்பினராக நியமிக்க அறிவுறுத்தப்பட்டதின் அடிப்படையில் ஒரு அரசு அலுவலரினை பரிந்துரைக்கும்படி வாரிய செயலகக்கிளை கடிதம் நாள் 29.12.2022-ல் |

| கோ. எண். | கோரிக்கைகள் | எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் |
|---|---|---|
| 2. | பதவி உயர்வு, இடமாறுதல் போன்ற வற்றில் அரசியல் தலையீடு காரணத்தால் ஊழியர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் பாதிக்கப்படுகிறார்கள். நேர்மையாக வெளிப்படை தன்மையோடு வாரிய விதிகளின் உத்திரவு வழங்கிட பட வேண்டும். | தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணி யாற்றும் பணியாளர்கள்/அலுவலர்களின் பதவி உயர்வு மற்றும் இட மாறுதல்கள் போன்றவைகள் வாரியத்தில் ஏற்படுகின்ற காலியிடம் மற்றும் நிர்வாக காரணங்களின் அடிப்படையில் வாரிய விதிகளுக்குட்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. |
| 3. | அரசாணை 100-ன்படி மின்வாரிய பணியாளர்கள் ஓய்வூதியர்கள் ஆகியோர்களுக்கு எந்தவித பாதிப்பும் அல்லாமல் ஏற்று கொள்ளக் கூடிய முத்தரப்பு ஒப்பந்தம் காண வேண்டும். | இதன் தொடர்ச்சியாக சில கருத்துரு வேண்டி தமிழக அரசிற்கு தலைமை பொறியாளர் / திட்டமிடல் கடித நாள் 09.12.2021-ல் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், இது சம்பந்தமாக நினைவூட்டு கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் பெறப்படும்பட்சத்தில் இதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும். |
| 4. | 1. 01.07.2022 முதல் மத்திய அரசு அறிவித்துள்ள பஞ்சப்படி 4 சதவிகிதம் உயர்வை வழங்கிட வேண்டும்.<br>2. 01.04.2003 பிறகு பணியில் சேர்ந்த அனைத்து பணியாளர்களுக்கும் பழைய முறையில் ஓய்வூதியம் வழங்கி சமூக பாதுகாப்பை உறுதி செய்திடல் வேண்டும்.<br>3. ஈட்டிய விடுப்பை ஒப்புவித்து ஊதியம் பெறும் நடைமுறையினை மீண்டும் அமல்படுத்திட வேண்டும்.<br>4. சிறப்பு தேர்வுகளில் தேர்ச்சி பெறுபவர்களுக்கும், உயர் கல்வி தகுதி பெறுபவர்களுக்கும் வழங்கப்பட்டு வந்த சிறப்பு ஆண்டு உயர்வை மீண்டும் வழங்கிட வேண்டும். | தமிழ்நாடு மின்சார வாரியமானது, தனது பணியாளர்கள் தொடர்பான அனைத்து ஆணைகளையும் தமிழ்நாடு அரசு ஆணைகளையே பின்பற்றியே பிறப்பித்து வருகிறது. இது தொடர்பாக தமிழ்நாடு அரசிடம் இருந்து எந்தவொரு ஆணையும் பெறப்படவில்லை.<br>இந்த கோரிக்கைகள் சம்பந்தமாக தமிழக அரசு உத்தரவு பிறப்பித்தால் அதனை பரிசீலித்து மேல் நடவடிக்கை எடுக்க ஆவண செய்யப்படும். |
| 5. | நாடு சுதந்திரம் பெற்ற 75 ஆண்டு காலத்தில் மின் உற்பத்தி மற்றும் விநியோகத்தில் சிறப்புடன் பணியாற்றி தொழில் மற்றும் விவசாய துறைகளில் | இதன் தொடர்பான (நிலை) முழுவாரிய தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக செயல்முறை ஆணை எண். 2 (செ.கி), நாள்: 12.04.2022-ன் உள்ள வரிசை எண். |

| கோ. எண். | கோரிக்கைகள் | எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் |
|---|---|---|
| | தமிழ்நாட்டை முதலிடம் பெறும் நிலையினை உருவாக்கிட தங்களை அர்ப்பணித்துக் கொண்ட மின்வாரிய ஊழியர்களும், அலுவலர்களும் தலை குனியும் வகையில் 20.05.2020 தேதியிட்ட அரசாணை எண். 248 வாயிலாக வழங்கப்பட்ட வழிகாட்டுதல்கள்படி இடப்பட்டு அமல்படுத்தப்பட்டுள்ள 12.04.2022 தேதியிட்ட மின் வாரிய ஆணை எண். 2ஐ ரத்து செய்திட வேண்டும். | 9 மற்றும் 10 ஆகியவை, முழு வாரிய நிலை ஆணை எண். 16 (செ.கி) நாள்: 27.06.2022 மூலமாக விலக்களிக்கப்பட்டுள்ளது.<br>மேலும் மற்ற கோரிக்கைகளின் மீது விலக்களிப்பது தொடர்பாக முழு வாரிய கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, வாரிய உறுப்பினர்களின் உத்தரவின்படியும், உயர்நீதிமன்ற சென்னை 17.11.2022 அன்று பிறப்பிக்கப்பட்ட ஆணையின் அடிப்படையில் தமிழக அரசிடமிருந்து பதிலுரை பெறப்பட்டப் பின், தக்க நடவடிக்கை எடுக்க இயலும். |
| 6. | போனஸ் சட்டத்தின் அடிப்படையில் தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி போனஸ்சும் கருணைத் தொகையும் 20 சதவிகிதம் வழங்கி வந்த நடைமுறையினை புறக்கணித்துவிட்டு 2019-2020, 2020-2021ஆம் ஆண்டுகளுக்கு தன்னிச்சையாக 10 சதவிகிதம் மட்டுமே போனஸ் வழங்கப்பட்டதால் ஏமாற்றமும், அதிருப்தியும் அடைந்துள்ள மின்வாரிய தொழிலாளர்கள் மனம் மகிழும் வகையில் எதிர்காலத்திலாவது வாடிக்கையான நடைமுறையினை கடைப்பிடித்திட நடவடிக்கை எடுத்திட வேண்டும். | இதற்கு முன்னர் போனஸ் தொடர்பாக தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, மேலும் தமிழக அரசு ஆணையை பின்பற்றி வாரியத்தில் செயல் முறை ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், கடந்த 2019-2020 மற்றும் 2020-2021 ஆண்டுகளில் கொரோனா பெருந்தொற்றை தொடர்ந்து எந்தவித பேச்சுவார்த்தையும் தொழிற்சங்கங்களுடன் நடைபெறவில்லை. மேலும் தற்பொழுது நிலவி வரும் கடுமையான நிதிச்சுமையிருப்பினும் அரசு பிறப்பித்த ஆணையினை பின்பற்றி வாரிய தொழிலாளர்களுக்கு 10 சதவிகிதம் போனஸ் வழங்கப்பட்டுள்ளது. |
| 7. | இன்றியமையாத துறைகளில் ஒன்றான தமிழ்நாடு மின்சாரத் துறை அண்மை காலத்தில் பேரிழப்புகளையும், நிதி நெருக்கடியினையும் சந்தித்து வருகின்ற நிலைமையினை சீரமைத்து அதனை சிறப்பாக செயல்படுத்திட உரிய பரிந்துரைகளை வழங்கிட இன்றைய அரசு தேர்தல் வாக்குறுதி எண். 26ல் கூறியுள்ளபடி உயர் நிலை வல்லுனர்குழு ஒன்றினை அமைத்திடவும் அந்த குழு மின்வாரியத்தில் | தற்போது Earnest & Youngest என்ற தனியார் நிறுவன வல்லுனர்கள் அடங்கிய குழு அமைக்கப் பெற்று அவர்களது கூராய்வு நடந்துக் கொண்டிருக்கிறது. அவர்களிடமிருந்து அறிக்கை பெற்றப் பின் அதனை பரிசீலித்து, தக்க நடவடிக்கை எடுக்க ஆவண செய்யப்படும். |

| கோ. எண். | கோரிக்கைகள் | எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் |
|---|---|---|
| | செயல்படும் தொழிற்சங்கங்களின் கருத்துக்களை கேட்டறிந்து உரிய பரிந்துரைகளை அளித்திடவும், அந்தப் பரிந்துரைகளை பரிசீலித்து அதன் மீது உரிய நடவடிக்கைகளை எடுத்திடவும் வேண்டும். | |

**//உண்மை நகல்//**

**பிரிவு அலுவலர்**

## வேலை நிறுத்த அறிவிப்பிற்கு கோரிக்கைகள் மீதான நிர்வாகக் கிளையின் பதில்

**நிர்வாகக்கிளை**

தொழிற்சங்கம் 1. தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு
2. தமிழ்நாடு மின்வாரிய கார்டு பில்லிங் ஸ்டாப் யூனியன்
3. தமிழ்நாடு எலெக்ட்ரிசிட்டி போர்டு அக்கவுன்ட்ஸ் அண்டு எக்ஸிகியூட்டிவ் ஸ்டாப் யூனியன்
4. தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன்
5. தமிழ்நாடு மின்வாரிய ஜனதா தொழிலாளர் சங்கம்
6. தமிழ்நாடு மின்சாரத் தொழிலாளர் சம்மேளனம்
7. மின்சார பிரிவு அண்ணா தொழிற்சங்கம்
8. தமிழ்நாடு தேசிய மின் தொழிலாளர் சம்மேளனம் (INTUC)
9. தமிழ்நாடு மின்சார வாரிய தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம்
10. தமிழ்நாடு மின்சார வாரிய தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம்
11. தமிழ்நாடு பவர் இன்ஜினியர்ஸ் ஆர்கனைசேஷன்.

இடம் : தொழிலாளர் ஆணையர் அலுவலகம்/சென்னை

பொருள் : மேற்கண்ட தொழிற்சங்கங்கள் தொழில் தாவா சம்மந்தமாக தலைமை பொறியாளர் / பணியமைப்பு அலுவலகத்தில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்த தகவல்.

நாள் : 03.01.2023

| வ. எண். | கேள்வி வரிசை எண் | தொழிற்சங்கத்தின் பெயர் | கோரிக்கைகள் | நிர்வாகக் கிளையில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| 1. | 4.<br><br>4.<br><br>4.<br><br>4. | தமிழ்நாடு மின்சாரத் தொழிலாளர் சம்மேளனம்<br><br>தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு.<br><br>தமிழ்நாடு மின்வாரிய ஜனதா தொழிலாளர் சங்கம்<br><br>தமிழ்நாடு மின்வாரிய கார்டு பில்லிங் ஸ்டாப் சங்கம். | பதவி உயர்வு, இடமாறுதல் போன்றவற்றில் அரசியல் தலையீடு காரணத்தால் ஊழியர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் பாதிக்கப்படுகிறார்கள். நேர்மையாக வெளிப்படை தன்மையோடு வாரிய விதிகளின் படி உத்திரவுகள் வழங்கிடப்பட வேண்டும். | பணியாளர்களின் விருப்ப மாறுதல் விண்ணப்பங்கள் ஜனவரி மாதத்திலும் ஜூலை மாதத்திலும் வருடத்திற்கு இரண்டு முறை பெறப்பட்டு வாரிய விதிகளின் படி பணி மாறுதல் உத்தரவுகள் வழங்கப்படுகிறது.<br><br>மேலும் தனி நபர் மாறுதல் கோரும் விண்ணப்பங்கள் பெறப்பட்டு காலிப் பணியிடங்களைப் பொருத்து ஆணைகள் வழங்கப்படுகிறது.<br><br>அதோடு மட்டுமில்லாமல் நிர்வாகக் காரணத்தினாலும் மாறுதல் உத்தரவுகள் வழங்கப்படுகிறது.<br><br>இவ்வகையில் பதவி உயர்வு, இட மாறுதல் போன்றவற்றில் நேர்மையாகவும், வெளிப்படை தன்மையோடு வாரிய விதிகளின்படி உத்திரவுகள் வழங்கப்படுகிறது. |
| 2. | 8.<br><br>7.<br><br><br><br>9.<br><br>8. | தமிழ்நாடு மின்சாரத் தொழிலாளர் சம்மேளனம்.<br><br>தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு.<br><br>தமிழ்நாடு மின்வாரிய ஜனதா தொழிலாளர் சங்கம்<br><br>தமிழ்நாடு மின்வாரிய கார்டு பில்லிங் ஸ்டாப் சங்கம். | ஒப்பந்த முறையை அகற்றி ஒப்பந்த தொழிலாளர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு வாரியமே முத்தரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் ரூ. 380/- தினக் கூலியை நேரிடையாக வழங்கிட வேண்டும். | i. வாரிய கொள்கை முடிவுகளின் அடிப்படையில் தொடர்ச்சியாக பணிபுரிந்த ஒப்பந்த தொழிலாளர்கள் அனைவரும் அடையாளம் காணப்பட்டு மற்றும் கருணைத்தொகை வழங்கப்பட்டு வாரியம் வகுத்த நிபந்தனைகளை பூர்த்தி செய்ததன் அடிப்படையில் பல்வேறு காலகட்டங்களில் படிப்படியாக பணி நிரந்தரப்படுத்தப் பட்டனர்.<br><br>ii. மேலும், கடைசியாக வாரியத்திற்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையே தொழிற்தகராறுகள் சட்டம், பிரிவு 12(3)-ன் கீழ் |
| | 2. | TNEB Employees Union | காலி பொறுப்புகளை நிரப்பும் பொழுது மின்வாரியத்தில் நீண்ட நாட்களாக ஒப்பந்த தொழிலாளர் | |

| வ. எண். | கேள்வி வரிசை எண் | தொழிற்சங்கத்தின் பெயர் | கோரிக்கைகள் | நிர்வாகக் கிளையில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| | | | களாக பணிபுரிந்து தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் பணியாளர்கள் நிரந்தர அந்தஸ்து வழங்கும் 1981-ம் ஆண்டு சட்டத்தின் கீழ் தொழிலாளர் ஆய்வாளர்களிடம் விண்ணப்பித்து நிரந்தரத்திற்கான உத்திரவுகள் பெற்று நிரந்தரப் படுத்தப்படாமல் உள்ள ஏறத்தாழ 5000 ஒப்பந்த தொழிலாளர்களை இன்றைய அரசு சட்டப்பேரவை தேர்தல் அறிக்கை வரிசை எண் 153-ல் இடம் பெற்றுள்ள வாக்குறுதிப்படி நிரந்தரப்படுத்திட வேண்டும். | 10.08.2007 அன்று ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி 21,600 ஒப்பந்த தொழிலாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டதன் தொடர்ச்சியாக வாரியத் தலைவர் அவர்களின் 13.09.2007 நாளிட்ட உத்தரவின்படி வாரியத்தில் ஒப்பந்த தொழிலாளர்களை நேரடியாக பணியில் ஈடு படுத்தும் முறை அகற்றப்பட்டது. அதன்படி, 2007-2008-க்கு பிறகு வாரியத்தில் ஒப்பந்த தொழிலாளர்கள் எவரும் நேரடியாக பணியில் ஈடு படுத்தப்படுவதில்லை.<br>iii. மேலும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் நேரடியாக ஒப்பந்த தொழிலாளர்களை பணியில் ஈடுபடுத்தும் முறை தடை செய்யப்பட்டு, தேவையின் அடிப்படையில் பணியின் தலைமைக்கேற்ப ஒப்பந்ததாரர்களிடம் பணிகள் ஒப்படைக்கப்பட்டு வருகிறது பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. |
| | 9.<br>8.<br>10. | தமிழ்நாடு மின்சாரத் தொழிலாளர் சம்மேளனம்.<br>தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு.<br>தமிழ்நாடு மின்வாரிய ஜனதா தொழிலாளர் சங்கம் | ஆரம்ப கட்ட பதவிகளான கள உதவியாளர், தொழில்நுட்ப உதவியாளர், கணக்கீட்டாளர், இளநிலை உதவியாளர், உதவிப் பொறியாளர் உள்ளிட்ட பதவிகள் 58,000-க்கு மேல் காலியாக உள்ள நிலையில் கூடுதல் பணிச்சுமையை தற்போதுள்ள ஊழியர்கள், பொறியாளர்கள் சுமந்து கொண்டு தடையில்லா மின் விநியோகத்தை | தற்போதுள்ள நடைமுறையை பின்பற்றி உள்முகத் தேர்வு மூலம் ஆரம்ப நிலை பதவிகளை நிரப்புவதற்காக கோப்பு வாரியக் குழுவின் முன்பு சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, வாரியக்குழுவின் 107-வது கூட்டத்தில், 07.06.2022-க்கு முன்னர் பணியில் சேர்ந்து உரிய கல்வித் தகுதி பெற்ற பணியாளர்கள் மட்டுமே உள்முகத் |

| வ. எண். | கேள்வி வரிசை எண் | தொழிற்சங்கத்தின் பெயர் | கோரிக்கைகள் | நிர்வாகக் கிளையில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| | 9. | தமிழ்நாடு மின்வாரிய கார்டு பில்லிங் ஸ்டாப் சங்கம். | வழங்கி வருகின்றனர். எனவே காலிப் பணியிடங்களை நிரப்பிட வேண்டும். | தேர்விற்கு தகுதியானவர்கள் என உத்தரவிடப்பட்டு அதன்படி, முழு வாரிய நிலையாணை எண். 5, (நிர்வாகக் கிளை), நாள் 07.07.2022 வெளியிடப்பட்டது. தற்போது உள்முகத் தேர்வு வாயிலாக ஆரம்ப நிலை பதவிகளை நிரப்புவது தொடர்பான கோப்பு பரிசீலனையில் உள்ளது.<br>மேலும், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலமாக பொதுத்துறை நிறுவனங்களின் நேரடி பணி நியமனங்கள் மேற்கொள்ள தமிழ்நாடு அரசால் சட்டம் (Act No. 14 of 2022) இயற்றப்பட்டதால் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் வாயிலாக காலிப்பணியிடங்கள் நிரப்பும் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |
| | 3. | மின்வாரிய நிதி மற்றும் TNEB AES Union | மின்வாரியத்தில் ஏற்கனவே பணிபுரியும் ஊழியர்களுள் தகுதி உடையவர்களை மின்வாரிய பணி விதி எண். 92-ல் வரையறுக்கப்பட்டுள்ள வழிமுறைகள்படி காலி பொறுப்புகட்கெதிராக உள்முகத் தேர்வு வழியாக தேர்ந்தெடுத்து நியமித்திட வேண்டும். | |
| | 6. | தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன். | காலியிடங்கள் Field Assistant, Technical Assistant, Assessor, Junior Assistant, Assistant Engineer, Assistant Draughtsman ஆகிய பதவிகள் சுமார் 56,000 காலியிடங்கள் நிரப்பிடல் வேண்டும். | |
| | 1. | மின்சாரப் பிரிவு அண்ணா தொழிற்சங்கம் | தமிழ்நாடு மின்சார வாரியத்தின் அனைத்து நிலைகளிலும் உள்ள காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்பிட வேண்டும். | |
| 4. | 11.<br>10.<br>13.<br>11. | தமிழ்நாடு மின்சாரத் தொழிலாளர் சம்மேளனம்.<br>தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு.<br>தமிழ்நாடு மின்வாரிய ஜனதா தொழிலாளர் சங்கம்<br>தமிழ்நாடு மின்வாரிய கார்டு பில்லிங் ஸ்டாப் சங்கம். | கேங்மேன் பணியாளர்களுக்கு உண்டான நியாயமான சலுகைகள் வழங்காதது ஊர்மாற்றம் உத்திரவு வழங்காதது. | கேங்மேன் (பயிற்சி) பணியாளர்கள் வட்டத்திற்குள் மாறுதல் பெற 1 ஆண்டும், வட்டம் விட்டு வட்டம் மாறுதல் பெற இரண்டு ஆண்டும் பணி நிறைவு செய்திருந்தால் மாறுதல் பெற தகுதியுடையவர்கள் என்ற ஆணை (Per.) (CMD) TANGEDCO Proceedings No. 72 நாள் : 23.11.2021 தற்போது நடைமுறையில் உள்ளது. |
| | 8. | தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன். | கேங்மேன் தொழிலாளர்களுக்கு விடுப்பு உள்ளிட்ட இதர சலுகைகளை அளிக்க அனுப்பப்பட்டுள்ள | கேங்மேன் தொழிலாளர்களுக்கு விடுப்பு உள்ளிட்ட சலுகைகள் வழங்குவது தொடர்பாக கோரிக்கை |

| வ. எண். | கேள்வி வரிசை எண் | தொழிற்சங்கத்தின் பெயர் | கோரிக்கைகள் | நிர்வாகக் கிளையில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் |
| --- | --- | --- | --- | --- |
| | | | கோப்புக்கு அரசு ஒப்புதல் அளித்திடல் வேண்டும். | முழு வாரியத்தின் முன் வைக்கப் பட்டு, 19.03.2022 அன்று அரசின் நிதி துறையின் பரிசீலனைக்காகவும் ஆலோசனை பெறுவதற்கும் முழு வாரியத்தில் ஒப்புதல் பெறப்பட்டு, 01.06.2022 அன்று அரசிற்கு கடிதம் அனுப்பப்பட்டது. பின்னர், அரசின் எரிசக்தி துறையிடமிருந்து மேலும் சில தெளிவுரைகள் வேண்டி 16.08.2022 அன்று கடிதம் பெறப்பட்டது. அதன் பிறகு உரிய தகவல்கள் 12.10.2022 அன்று அரசிற்கு அனுப்பப்பட்டது. அது சம்பந்தமாக உரிய உத்திரவுகள் அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படு கிறது. |
| 5. | 14. | தமிழ்நாடு நேஷனல் எலக்ட்ரிசிட்டி ஒர்க்கர்ஸ் பெடரேஷன். | கேங்மேன் தொழிலாளர்களுக்கு கள உதவியாளர் பதவியும், அடிப்படை சம்பளமும் வழங்கிடவும், மேலும் அனைத்து பிரிவு பணியாளர் களுக்கும், உள்முகத் தேர்வு மூலம் வாய்ப்பு வழங்கிடும் வகையில் பணி விதிகளில் திருத்தம் செய்யப் பட வேண்டும். பணி ஒதுக்கீட்டை மறு சீரமைப்பு செய்த பின்பு நிர்வாக இடமாறுதல் வழங்கப்பட வேண்டும். | வாரிய முழு நிலையானை எண். 2 (நிர்வாகக்கிளை) நாள் 06.03.2019-ன் வாயிலாக கேங்மேன் பதவியில் மாற்றமோ அல்லது உள்முக தேர்வோ கிடையாது என்கிற நிபந்தனை யுடன் கேங்மேன் பணியாளர் களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது. |
| 6. | 6. | மின்சாரப் பிரிவு அண்ணா தொழிற்சங்கம் | கேங்மேன்களுக்கு விருப்ப இட மாற்ற சலுகைகளை உடனடியாக வழங்கிட வேண்டும். | கேங்மேன் (பயிற்சி) பணியாளர்கள் வட்டத்திற்குள் மாறுதல் பெற 1 ஆண்டும், வட்டம் விட்டு வட்டம் மாறுதல் பெற இரண்டு ஆண்டும் பணி நிறைவு செய்திருந்தால் மாறுதல் பெற தகுதியுடையவர்கள் என்ற ஆணை (Per.) (CMD) TANGEDCO Proceedings No. 72 நாள் 23.11.2021 தற்போது நடைமுறையில் உள்ளது. |

| வ. எண். | கேள்வி வரிசை எண் | தொழிற்சங்கத்தின் பெயர் | கோரிக்கைகள் | நிர்வாகக் கிளையில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| 7. | 8. | தமிழ்நாடு மின்வாரிய தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம். | கேங்மேன் தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பளம் வழங்கிட வேண்டும் உடனடியாக தொகுப் பூதியத்தில் ரூ. 5,000-ம் உயர்த்திட வேண்டும். அனைத்து உள்முகத் தேர்வுக்கும் வாய்ப்பு வழங்கிடும் வகையில் பணிவிதியில் திருத்தம் செய்திட வேண்டும். கேங்மேன் பணியாளர்களுக்கு விடுப்பு உள்ளிட்ட இதர சலுகைகளை மின்வாரிய உத்திரவின்படி வழங்கிட வேண்டும். | கேங்மேன் (பயிற்சி) பணியாளர்களுக்கு உண்டான நியாயமான சலுகைகளை வழங்குவது தொடர்பான கோப்பு ஒன்று தற்போது செயல்பாட்டில் உள்ளது. |
| 8. | 12.<br>11.<br>14.<br>12. | தமிழ்நாடு மின்சாரத் தொழிலாளர் சம்மேளனம்.<br>தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு.<br>தமிழ்நாடு மின்வாரிய ஜனதா தொழிலாளர் சங்கம்.<br>தமிழ்நாடு மின்வாரிய கார்டு பில்லிங் ஸ்டாப் சங்கம். | பகுதி நேர பணியாளர்களின் அடையாளம் காணப்பட்டவர்களை நிரந்தரம் செய்திட வேண்டும். மீதமுள்ளவர்களை அடையாளங் கண்டு நிரந்தரம் செய்ய வேண்டும். | தற்போது மாதாந்திர தொகுப் பூதியத்தில் பணிபுரியும் பகுதி நேர துப்புரவு பணியாளர்களை கால முறை ஊதியத்தில் பணியமர்த்து வதற்காக அரசின் ஒப்புதல் வேண்டி கடிதம் அனுப்பப்பட்டது. அதனைத் தொடர்ந்து அரசு எரிசக்தி துறை யினால் மேற்கண்ட கோரிக்கை 22.11.2022 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக நிராகரிக்கப்பட்டது. மேலும், பகுதி நேர துப்புரவு பணியாளர்களை வாரிய நிலை ஆணை (Per.) CMD TANGEDCO Proceedings No. 76, (Adm. Branch), dated 09.11.2020ன்படி, ஒப்பந்த முறையில் மட்டுமே அவர்களை பணியமர்த்திட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. |
| | 7. | TNEB AES Union | தூய்மைப் பணியாளர்களே நியமிக்கப்படாத அலுவலகங்கட்கு பணியாளர்களை நியமித்திட வேண்டும். மாதம் ஒன்றிற்கு ரூ. 1000/- மட்டுமே தொகுப்பூதியமாக பெற்றுக் கொண்டு தூய்மைப் பணி ஆற்றி வரும் பணியாளர்களை நிரந்தரப்படுத்திட வேண்டும். | |
| 9. | 2. | TNEB AES Union | காலி பொறுப்புகளை நிரப்பும் பொழுது மின்வாரியத்தில் நீண்ட நாட்களாக ஒப்பந்த தொழிலாளர் களாக பணிபுரிந்து தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் பணியாளர் | i. வாரிய கொள்கை முடிவுகளின் அடிப்படையில் தொடர்ச்சியாக பணிபுரிந்த ஒப்பந்த தொழிலாளர்கள் அனைவரும் அடையாளம் காணப்பட்டு |

| வ. எண். | கேள்வி வரிசை எண் | தொழிற்சங்கத்தின் பெயர் | கோரிக்கைகள் | நிர்வாகக் கிளையில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| | | | கள் நிரந்தர அந்தஸ்து வழங்கும் 1981-ம் ஆண்டு சட்டத்தின் கீழ் தொழிலாளர் ஆய்வாளர்களிடம் விண்ணப்பித்து நிரந்தரத்திற்கான உத்திரவுகள் பெற்று நிரந்தரப் படுத்தப்படாமல் உள்ள ஏறத்தாழ 5000 ஒப்பந்த தொழிலாளர்களை இன்றைய அரசு சட்டப்பேரவை தேர்தல் அறிக்கை வரிசை எண் 153-ல் இடம் பெற்றுள்ள வாக்குறுதிப்படி நிரந்தரப்படுத்திட வேண்டும். | மற்றும் கருணைத்தொகை வழங்கப்பட்டு வாரியம் வகுத்த நிபந்தனைகளை பூர்த்தி செய்ததன் அடிப்படையில் பல்வேறு காலகட்டங்களில் படிப் படியாக பணி நிரந்தரப்படுத்தப் பட்டனர்.<br>ii. மேலும், கடைசியாக வாரியத் திற்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையே தொழிற்தகராறுகள் சட்டம், 1947 பிரிவு 12(3)-ன் கீழ் 10.08.2007 அன்று ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி 21,600 ஒப்பந்த தொழிலாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டனர். அதன் தொடர்ச்சியாக வாரியத் தலைவர் அவர்களின் 13.09.2007 நாளிட்ட உத்தரவின்படி வாரியத் தில் ஒப்பந்த தொழிலாளர்களை நேரடியாக பணியில் ஈடு படுத்தும் முறை அகற்றப்பட்டது. அதன்படி, 2007-2008-க்கு பிறகு வாரியத்தில் ஒப்பந்த தொழிலாளர்கள் எவரும் நேரடி யாக பணியில் ஈடுபடுத்தப்படுவ தில்லை.<br>iii. மேலும், 10.08.2007 நாளிட்ட 12(3) ஒப்பந்தத்தில் இடம் பெறாமல் விடுபட்ட ஒப்பந்த தொழிலாளர்களை 20.02.2008 மற்றும் 04.03.2008 நாளிட்ட குறிப்பாணை வாயிலாக, அனைத்து மேற்பார்வைப் பொறியாளர்களுக்கும் தினக்கூலி அடிப்படையில் பணியில் ஈடு படுத்திக் கொள்ள உத்தரவு |

| வ. எண். | கேள்வி வரிசை எண் | தொழிற்சங்கத்தின் பெயர் | கோரிக்கைகள் | நிர்வாகக் கிளையில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| | | | | வழங்கப்பட்டது. அவ்வாறு, பணிபுரிந்த 4037 ஒப்பந்த தொழிலாளர்களுக்கும் மற்றும் 237 தற்காலிக தினக்கூலி தொழிலாளர்களுக்கும் 2010-2011-ஆம் ஆண்டிற்கான கருணைத்தொகை வழங்கப் பட்டு, 2012-ல் மஸ்தூர் (பயிற்சி) ஆக பணிநிரந்தரம் வழங்கப்பட்டது.<br>iv. மேலும், பல்வேறு தொழிலாளர் களால் பணி நிரந்தரம் வேண்டி தொடரப்படும் பல்வேறு வழக்கு களில் பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற தீர்ப்புகளின்படியும் மற்றும் வாரிய நிலையாணை எண். 9 (நிர்வாகக்கிளை) நாள் 09.01.2008-ன்படி அமைக்கப் பட்ட குழுவினராலும் அத்தொழி லாளர்களின் கோரிக்கைகள் உரிய முறையில் பரிசீலிக்கப் பட்டு தகுந்த பதிலளிக்கப்பட்டு வருகிறது. |
| 2. | 8. | TNEB AES Union | இளநிலை உதவியாளர் மற்றும் கணக்கீட்டாளர் பொறுப்புகளுக்கு நியமனத்திற்கான முறையே (1) (Per) F.B.TANGEDCO Proceedings No. 25, dt: 24.05.2014 (2) (Per) F.B. TANGEDCO Proceedings No. 31, dt. 7.8.2019 ஆகிய வாரிய ஆணைகள் வாயிலாக அமுல்படுத்தப்பட்ட பட்டப்படிப்பு என்ற கல்வித்தகுதி உயர்வை இரத்து செய்திட வேண்டும். | நிர்வாகத் திறனை அதிகரிப்பதற்காக இளநிலை உதவியாளர் பதவிக்கான கல்வித் தகுதி வாரியத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே பட்டப் படிப்பாக நிர்ணயிக்கப்பட்டு (Per) F.B. TANGEDCO Proceedings No. 25, dt. 24.05.2014 வாயிலாக உத்தர விடப்பட்டது. மேற்கண்ட உத்தர வினை எதிர்த்து நீதிமன்ற வழக்கு நீண்ட காலமாக நிலுவையில் உள்ளது. எனவே, அப்பதவிக்கான கல்வித் தகுதியினை பட்டப்படிப்பி லிருந்து குறைந்தபட்ச கல்வித் |

| வ. எண். | கேள்வி வரிசை எண் | தொழிற்சங்கத்தின் பெயர் | கோரிக்கைகள் | நிர்வாகக் கிளையில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| | | | | தகுதியாக (எஸ்.எஸ்.எல்.சி) மாற்றுவதற்காக, 28.10.2022 நாளிட்ட கடிதம் அரசின் ஒப்புதலுக் காக அனுப்பப்பட்டுள்ளது.<br>இனிவரும் காலங்களில் கணக்கீட்டு முறைகளில் நவீன யுக்திகளை செயல்படுத்தவும் ஸ்மார்ட் மீட்டர் மற்றும் மின்கட்டணத்தை முன் கூட்டியே செலுத்தும் முறை (Pre-paid) போன்ற வசதிகள் அறிமுகப் படுத்தப்பட இருப்பதாலும், தகுதி யுடைய பணியாளர்களை நியமனம் செய்வதற்கும் மற்றும் வருவாய் இழப்பைத் தடுக்கவும் கணக்கீட்டா ளர் பதவிக்கான குறைந்தபட்ச கல்வித்தகுதியை முழு வாரியத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே பட்டப்படிப்பாக (Per) F.B. TANGEDCO Proeedings No. 31, dt: 07.082.019 வாயிலாக ஆணை பிறப்பிக்கப்பட்டது. |
| 11. | 10. | TNEB AES Union | தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி உடன்பாடு காணாமல் வாடிக்கைக்கு மாறாக வாரிய நிர்வாகம் 06.03.2019 தேதியை வாரிய ஆணை எண். 2 வாயிலாக உருவாக்கி நிரப்பி உள்ள கேங்மேன் பணித்தொகுப்பு ஊழியர்களின் பிரச்சனைகள் குறித்து சங்கங்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி தீர்வுகாண வேண்டும். | கேங்மேன் (பயிற்சி) பணியாளர் களுக்கு உண்டான நியாயமான சலுகைகளை வழங்குவது தொடர்பான கோப்பு ஒன்று தற்போது செயல்பாட்டில் உள்ளது. |
| 12. | 12. | TNEB AES Union | எண்ணூர் அனல் மின் உற்பத்தி வட்டம் தனது செயல்பாடுகளை 31.03.2017 முதல் நிறுத்திய காரணத்தால் அங்கு பணியாற்றிய | எண்ணூர் அனல் மின் உற்பத்தி வட்டம் தனது செயல்பாடுகளை 31.03.2017 முதல் நிறுத்திய காரணத்தால் அங்கு பணியாற்றிய |

| வ. எண். | கேள்வி வரிசை எண் | தொழிற்சங்கத்தின் பெயர் | கோரிக்கைகள் | நிர்வாகக் கிளையில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| | | | ஏறத்தாழ 450 ஊழியர்கள் தற்காலிகமாக சென்னை வடக்கு, தெற்கு, மேற்கு மற்றும் மைய வட்டங்களுக்கு தற்காலிக பணியிட மாற்றம் (Diversion) செய்யப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். அவர்களது மின்உற்பத்தி வட்ட பணி அனுபவத்தை வடசென்னை அனல் மின்உற்பத்தி வட்டம் மூன்றாம் அலகிற்கு பயன்படுத்திக் கொள்ளும் வகையில் அவர்களுக்கு சென்னை அனல்மின் வட்டம் அலகு மூன்றிற்கு மாறுதல் வழங்கிட வேண்டும். | ஏறத்தாழ 450 ஊழியர்கள் தற்காலிகமாக சென்னை வடக்கு, தெற்கு, மேற்கு மற்றும் மைய வட்டங்களுக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். ஆகவே, பணியிட மாற்றம் விரும்புவோர் விருப்ப மாறுதல் அளிக்கும் பட்சத்தில் அவர்களது கோரிக்கைகள் காலிப் பணியிடங்களுக்கு ஏற்ப பரசீலிக்கப்படும். |
| 13. | 9 | தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன். | 10,000-க்கு மேற்பட்ட ஒப்பந்த தொழிலாளர்கள் தொடர்ந்து பணி செய்து வருகிறார். தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி நிரந்தரம் செய்திட வேண்டும். | i. வாரிய கொள்கை முடிவுகளின் அடிப்படையில் தொடர்ச்சியாக பணிபுரிந்தஒப்பந்ததொழிலாளர்கள் அனைவரும் அடையாளம் காணப்பட்டு மற்றும் கருணைத் தொகை வழங்கப்பட்டு வாரியம் வகுத்த நிபந்தனைகளை பூர்த்தி செய்ததன் அடிப்படையில் பல்வேறு காலகட்டங்களில் படிப்படியாக பணி நிரந்தரப்படுத்தப் பட்டன.<br>ii. மேலும், கடைசியாக வாரியத்திற்கும், தொழிற்சங்கங்களுக்கும் இடையே தொழிற்தகராறுகள் சட்டம், பிரிவு 12(3)-ன் கீழ் 10.08.2007 அன்று ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி 21,600 ஒப்பந்த தொழிலாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டதன் தொடர்ச்சியாக வாரியத் தலைவர் அவர்களின் 13.09.2007 நாளிட்ட உத்தரவின்படி வாரியத்தில் |

| வ. எண். | கேள்வி வரிசை எண் | தொழிற்சங்கத்தின் பெயர் | கோரிக்கைகள் | நிர்வாகக் கிளையில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| | | | | ஒப்பந்த தொழிலாளர்களை நேரடியாக பணியில் ஈடுபடுத்தும் முறை அகற்றப்பட்டது. அதன்படி, 2007-2008-க்கு பிறகு வாரியத்தில் ஒப்பந்த தொழிலாளர்கள் எவரும் நேரடியாக பணியில் ஈடுபடுத்தப்படுவதில்லை.<br>iii. எனவே, தற்போது வாரியத்தில் ஒப்பந்த தொழிலாளர்கள் எவரும் நேரடியாக பணியில் இல்லாத நிலையில் ஒப்பந்த தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்திட பேச்சுவார்த்தை நடத்துவதன் அவசியம் எழாது. |
| 4. | 10. | தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன். | 1000 அலுவலகங்களுக்கு மேல் பகுதி நேரப் பணியாளர்கள் இல்லாத நிலை உள்ளது. ஊதியமின்றி பணி செய்து கொண்டிருப்பவர்களை நிரந்தரம் செய்திடல் வேண்டும். | தற்போது மாதாந்திர தொகுப்பூதியத்தில் பணிபுரியும் பகுதி நேர துப்புரவு பணியாளர்களை கால முறை ஊதியத்தில் பணியமர்த்துவதற்காக அரசின் ஒப்புதல் வேண்டி கடிதம் அனுப்பப்பட்டது. அதனைத் தொடர்ந்து அரசு எரிசக்தி துறையினால் மேற்கண்ட கோரிக்கை 22.11.2022 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக நிராகரிக்கப்பட்டது.<br>மேலும், பகுதி நேர பணியாளர்கள் இல்லாத அலுவலகங்களில் துப்புரவு பணிகளை மேற்கொள்ள வாரிய நிலை ஆணை (Per.) CMD TANGEDCO Proceedings No. 76, (Adm. Branch), dated 09.11.2020-ன்படி, ஒப்பந்த முறையில் மட்டுமே பணியாளர்களை பணியமர்த்திட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. |

| வ. எண். | கேள்வி வரிசை எண் | தொழிற்சங்கத்தின் பெயர் | கோரிக்கைகள் | நிர்வாகக் கிளையில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| 15. | 13. | தமிழ்நாடு நேஷனல் எலக்டிரிசிட்டி ஒர்க்கர்ஸ் பெடரேஷன். | குறைந்தபட்ச ஊதியமாக மாதம் ரூ. 21,000-ம் வழங்கப்பட வேண்டும். | குறைந்தபட்ச ஊதியமாக மாதம் ரூ. 21,000 வழங்குவது குறித்து ஊதிய நிர்ணயக்குழு முடிவு எடுக்கும். |
| 16. | 5. | தமிழ்நாடு மின்வாரிய தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம். | மின்வாரியத்தில் உள்ள 35,000-த்திற்கும் மேற்பட்ட கள உதவியாளர், கம்பியாளர் மற்றும் வணிக உதவியாளர் காலியிடங்களை ஐ.டி.ஐ படித்த திறன்மிகு தொழிலாளர்களை கொண்டு நேரடித் தேர்வு மூலம் நிரப்பி மக்கள் சேவையை தொடர்ந்திட வேண்டும். ஏனைய துவக்க நிலைப் பதவிகளில் உள்ள கணக்குப் பிரிவு, கணக்கீட்டுப் பிரிவு, பண்டக சாலைப் பிரிவு, தொழில்நுட்ப உதவியாளர், உதவி மின்பொறியாளர் காலியிடங்களை உள்முக மற்றும் நேரடித் தேர்வு மூலம் நிரப்பிட நடவடிக்கை எடுத்திட வேண்டும். | தற்போதுள்ள நடைமுறையை பின்பற்றி உள்முகத் தேர்வு மூலம் ஆரம்ப நிலை பதவிகளை நிரப்பு வதற்காக கோப்பு வாரியக்குழுவின் முன்பு சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, வாரியக்குழுவின் 107-வது கூட்டத்தில், 07.06.2022-க்கு முன்னர் பணியில் சேர்ந்து உரிய கல்வித் தகுதி பெற்ற பணியாளர்கள் மட்டுமே உள்முகத் தேர்விற்கு தகுதியானவர்கள் என உத்தரவிடப் பட்டு அதன்படி, முழு வாரிய நிலை யாணை எண். 5 (நிர்வாகக் கிளை), நாள் 07.07.2022 வெளியிடப் பட்டது. தற்போது உள்முகத் தேர்வு வாயிலாக ஆரம்ப நிலை பதவிகளை நிரப்புவது தொடர்பான கோப்பு பரிசீலனையில் உள்ளது.<br><br>மேலும், தமிழ்நாடு அரசு பணி யாளர் தேர்வாணையம் மூலமாக பொதுத்துறை நிறுவனங்களில் நேரடி பணி நியமனங்கள் மேற் கொள்ள தமிழ்நாடு அரசால் சட்டம் (Act No. 14 of 2022) இயற்றப் பட்டதால் தமிழ்நாடு அரசு பணி யாளர் தேர்வாணையம் வாயிலாக காலிப்பணியிடங்கள் நிரப்பும் பொருட்டு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகிறது. |
| 17. | 6. | தமிழ்நாடு மின்வாரிய தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம். | 2009-ஆம் ஆண்டில் நேரடித் தேர்வு பணியமர்த்திய ஐ.டி.ஐ படித்தவர்களுக்கு உயர்நீதிமன்ற | 2009ஆம் ஆண்டில் நேரடி பணி நியமனம் வாயிலாக கள உதவியாளர் பதவிக்கு தேர்வு |

| வ. எண். | கேள்வி வரிசை எண் | தொழிற்சங்கத்தின் பெயர் | கோரிக்கைகள் | நிர்வாகக் கிளையில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| | | | டிவிசன் பெஞ்ச் உத்திரவின்படி பணியேற்பு செய்த தேதியில் இருந்து அடிப்படைச் சம்பளம் வழங்கிட வேண்டும். | செய்யப்பட்டவர்களுக்கு பணியேற்பு செய்த தேதியிலிருந்து அடிப்படைச் சம்பளம் வழங்குவது தொடர்பாக வழங்கப்பட்ட உயர்நீதிமன்ற உத்தரவிற்கு எதிராக மாண்புமிகு உச்சநீதி மன்றத்தில் SLP வழக்கு தொடரப்பட்டுள்ளது. |
| 18. | 10. | தமிழ்நாடு மின்வாரிய தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம். | JE-I-GR, JE-II-GR, பதவிகளுக்கு காலம் தாழ்த்தாமல் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும். | தொழில்நுட்ப உதவியாளர் / மின்னியலிலிருந்து இளநிலை பொறியாளர் 2-ம் நிலை மின்னியல் பதவி உயர்வு மற்றும் இளநிலை பொறியாளர் 2-ம் நிலையிலிருந்து இளநிலைப் பொறியாளர் முதலாம் நிலைக்கு பதவி உயர்வு வழங்கு வதற்கு விரைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |
| 19. | 7. | மின்சார பிரிவு அண்ணா தொழிற் சங்கம். | தொழிற் சங்கங்களுடன் கலந்தாலோசனை செய்யாமல் தற்போதுள்ள மறுசீரமைப்பு என்கிற பெயரில் பிரிவு அலுவலகங்கள் உபகோட்டங்கள் மற்றும் கோட்டங்களை பிரிக்கும் முடிவை கைவிட வேண்டும். | இது வாரியத்தின் முடிவினிற்குட் பட்டது. ஆகவே, மேல் உத்திரவின்படி செயல்பட முடியும். |

(ஒப்பம்/02.01.2023)
பணித்தொகுதி அலுவலர்/செயலாக்கம்

## ஊதிய உயர்வு பேச்சுவார்த்தை குழுவில் அரசு தரப்பு உறுப்பினர்கள் நியமனம்

**SECRETARIAT BRANCH**
N.P.K.R.R. Maaligai,
144, Annasalai,
Chennai - 2.

**Memorandum (Per) No. 52295/A16/A161/2019-11 Dated : 05.01.2023**

***Sub*** : TANGEDCO - Revision of Wages and Revision of Work Allocation and Staff pattern effective from 01.12.2019 - Constitution of Wage Revision Committee - Inclusion of Government representatives in the Wage Revision Committee - Amendments - Orders - Issued.

***Ref*** : 1. (Per.) CMD TANGEDCO Proceedings No. 224 (SB) dated 07.12.2019.
2. From the Government Letter No. 10440/B2/2022-1, dated 04.01.2023.

*****

In the reference first cited, the Wage Revision Committee has been constituted to negotiate with the Unions/ Associations for revision of Pay, Work allocation and Staff pattern with effectfrom 1.12.2019.

2. In the reference second cited, the Government had nominated the following officers representing Finance Department/Energy Department for inclusion in the Wage Revision Committee of TANGEDCO.

1. Thiru. Prashant M. Wadnere, I.A.S., Additional Secretary to Government, Finance Department, Secretariat, Chennai-9.
2. Thiru. S. Muralidharan, Additional Secretary to Government, Energy Department, Secretariat, Chennai-9.

The same has been considered, Accordingly, it is ordered that the officers representing FInance Department/ Energy Department are included in the Wage Revision Committee as Members.

**(BY ORDER OF THE CHAIRMAN CUM MANAGING DIRECTOR)**

**G. CHINNA NAGUR**

Secretary (FAC)

## தமிழ்நாடு மின்வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழுவின் ஆட்சேபணை கடிதம்

**நாள்:** 06.01.2023

பெறுநர்:

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்** அவர்கள்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா, வணக்கம்.

**பொருள்** : **ஊதிய உயர்வு பேச்சுவார்த்தை குழுவில் - அரசு தரப்பில் நிதி மற்றும் எரிசக்தி துறை அதிகாரிகளை இணைத்துள்ளது - -ஆட்சேபனை தெரிவிப்பது - தொடர்பாக.**

**பார்வை** : **Memo (Per) No. 52295/A16/A161/2019-1, Dated 05.01.2023.**

